2018 நவம்பர் மாதம் 27 – ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

*தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்*

***எம்.சி.ஓ.பி.நெ. : 790 / 2015***

*2018–ம் ஆண்டு நவம்பர் மாதம் 27–ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. K. ராஜா, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | PW2, எம். குணசேகரன் |
| **தகப்பனார் பெயர்** | : | கே. முருகேசன் |
| **ஊர்** | : | திருச்சி |
| **வட்டம்** | : | திருச்சி |
| **மாவட்டம்** | : | திருச்சி |
| **தொழில்** | : | தனியார் மருத்துவமனை ஊழியர் |
| **வயது** | : | 28 |

*தேதி: 27.11.2018.*

**முதல் விசாரணை:–**

நான் திருச்சியில் உள்ள கீதாஞ்சலி மருத்துவமனையில் ரெக்கார்டு கிளார்க்காக பணிபுரிகின்றேன். நான் அழைப்பாணையின் பேரில் ஆஜராகின்றேன். எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எங்கள் நிர்வாகம் வழங்கிய அதிகாரக்கடிதம் அசல் **ம.சா.ஆ.9.** எங்கள் மருத்துவமனையில் ஜனார்தனகிரிடி என்பவர் சாலை விபத்து தொடர்பாக சிகிச்சை பெற்றுள்ளார். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 டிஸ்சார்ஜ் சம்மரி, ம.சா.ஆ. 5 வரிசை பில்கள் எங்கள் மருத்துவமனையில் அவருக்கு வழங்கப்பட்டதாகும். மேற்படி நபருக்கு எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்றின் கார்பன் நகல் **ம.சா.ஆ.10.** அவருக்கு எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சை சம்மந்தமான கோப்பு புகைப்பட நகல் **ம.சா.ஆ.11 வரிசை.**

**குறுக்கு விசாரணை:–( 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் )**

நான் மேற்படி மருத்துவமனையில் 2011 ஆம் ஆண்டு பணிக்கு சேர்ந்தேன். எங்கள் மருத்துவமனையில் மருத்துவப்பதிவேடு அலுவலகம் தனியாகவும், பில்லிங் செக்ஷன் தனியாகவும் உள்ளது என்பது சரி. பில்லிங் செக்ஷனுக்கு தனியாக மேனேஜர் நியமிக்கப்பட்டு கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன என்பது சரி. மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடிந்து விடுவிக்கப்படும் நோயாளிக்கு டிஸ்சார்ஜ் சம்மரியும், மருத்துவ

பில்களும், அந்த பில்லிங் செக்ஷனில் தான் வழங்கப்படும் என்பது சரி. பில்லிங் செக்ஷனில் வழங்கப்படும் அந்த டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் பில்களை நான் நேரடியாக பார்த்ததில்லை. எனவே ம.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்களை எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்டதாக என்னால் அறுதியிட்டு கூறமுடியாது என்றால் தவறு. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.5 வரிசை ஆவணங்கள் கையெழுத்திட்டுள்ள நபர் யார் என்பது எனக்கு தெரியாது. அந்த பில்களை பொறுத்து பில்லிங் செக்ஷனில் பணிபுரிபவர்களை அழைத்து விசாரித்தால் தான் அந்த விபரம் தெரியவரும் என்பது சரி. ம.சா.ஆ.5 வரிசை ஆவணங்கள் எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்டதாக மனுதாரர் கேட்டுக்கொண்டதால் நான் பொய்யாக கூறுகின்றேன் என்றால் தவறு. ம.சா.ஆ.5 ஆவணத்தை பொறுத்து நான் அளித்துள்ள சாட்சியம் ஏற்க முடியாது என்றால் தவறு.

**குறுக்கு விசாரணை:–( 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் )**

மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை:–** இல்லை.

ஒம்/–அ.முரளீதரன்,
தலைமைக் குற்றவியல் நீதித்துறைநடுவர்,
பெரம்பலூர்.